தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் (**B.A. TAMILOLOGY - Degree**)

முதலாம் ஆண்டு – முதற் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு (**OFF - LINE WRITTEN EXAMINATION**)

நவம்பர், திசம்பர் - 2016

**P101** சிறுகதையும் புதினமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. வா.வே.சு. ஐயரின் எந்த சிறுகதை தமிழின் முதல் சிறுகதையாகச் சுட்டப்படுகிறது?
2. நவீன சிறுகதை எழுத்தாளர்கள் இருவரை குறிப்பிடுக.
3. அறிஞர் அண்ணாவின் சிறுகதைகளைக் குறிப்பிடுக.
4. ஜெயகாந்தனின் முதல் சிறுகதை எவ்விதழில் வெளிவந்தது?
5. புதுமைப்பித்தன் கதைகளில் அதிக விமர்சனத்திற்கு உள்ளான சிறுகதைகள் இரண்டினை கூறுக.
6. சிறுகதைகளுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வரும் சில அமைப்புகளின் பெயர்களை எழுதுக.
7. விந்தனின் சிறுகதைகள் எத்தனைத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன?
8. மலேசியாவில் சிறுகதை வளர்க்கும் இரு இதழ்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. புதினம் விளக்கம் தருக.
10. புதின இலக்கிய வகைகளைக் கூறுக.
11. கூட்டுக்குஞ்சுகள் நாவலின் கதைக்கரு யாது?
12. டானியல் எழுதிய மூன்று நாவல்களை எழுதுக.
13. பொன்னீலனின் நாவல்கள் எத்தகையன?
14. சுஜாதாவின் புதினங்கள் இரண்டினை எழுதுக.
15. சமூக புதின ஆசிரியர்கள் இருவரை குறிப்பிடுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. விந்தனின் எழுத்துலக நுழைவு பற்றி எழுதுக.
2. ஜெயகாந்தனின் சிறுகதைகளில் கதைக்கரு பற்றி எழுதுக.
3. ஆர்.சூடாமணி சிறுகதைகளில் பெண்ணிய சிந்தனைகளை எழுதுக.
4. சு. சமுத்திரத்தின் சிறுகதைகளில் சமூக சிறுகதைகள் நான்கினை எழுதுக.
5. வண்ணகத்துப் பூந்துளிகள் என்ற நாவலில் பேசப்படும் பிரச்சனைகளை எழுதுக.
6. சிவகாமியின் படைப்புகள் பற்றி எழுதுக.
7. தியாக பூமி புதினத்தின் கதைக்கருவினை எழுதுக.
8. கே.டேனியல் புதினங்களின் கருப்பொருள்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை அம்பையின் சிறுகதையின்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) அறிஞர் அண்ணாவின் சிறுகதை வழி புலனாகும் பொதுவுடைமைச் சிந்தனைகளை மதிப்பிடுக.

2. (அ) கு.அழகிரிசாமியின் சிறுகதைகளில் சிறுவர் மனநிலையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) அகிலனின் பொன்மலர் புதினத்தில் சமுதாய சிந்தனைகளை ஆராய்க.

3. (அ) கி.ராஜநாராயணன் புதினங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கையை விமர்சனம் செய்க.

(அல்லது)

(ஆ) புதினத்தின் தொடக்க கால நாவல்கள் பற்றி எழுதுக.

*** 